தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in


பெறுநர், தேதி: 11-11-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## கார்த்திகைப்பட்டத்திற்கான காய்கறிகளின் விலை முன்னறிவிப்பு - தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை

விவசாயிகளின் கார்த்திகைப்பட்ட நடவுக்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் முக்கிய காய்கறி பயிர்களான தக்காளி, கத்திரி மற்றும் வெண்டை ஆகியவற்றுக்கு கீழ்கண்ட விலை முன்னறிவிப்புகளை வெளியிடுகின்றது.

**தக்காளி**

தமிழ்நாட்டில் அனைத்து வகையான உணவு வகைகளுக்கும் தக்காளி மிக முக்கிய காய்கறியாகும். இவை தமிழ்நாட்டில் நான்கு பட்டங்களில் அதாவது தை, சித்திரை, ஆடி மற்றும் கார்த்திகை பட்டங்களில் பரவலாக பயரிடப்படுகின்றன. அவற்றுள், கார்த்திகை பட்டம் தக்காளி சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது. அதனால் அனைத்து விவசாயிகளும் இப்பட்டத்தில் சாகுபடி செய்ய ஆர்வமாக உள்ளனர். உள்ளூர் வரத்து நீங்கலாக அண்டை மாநிலங்களான ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகாவின் பங்களிப்பு உள்ளூர் தேவையை பூர்த்தி செய்கின்றன. தற்போது கோயம்புத்தூர் மொத்த சந்தைக்கு தக்காளி வரத்து உள்ளூர் விவசாயிகள் மற்றும் கர்நாடகாவிலிருந்து அதிக அளவில் வரத்து உள்ளது. கடந்த தென்மேற்கு பருவமழை காலத்தில் கர்நாடகா மற்றும் கோயம்புத்தூர் பகுதிகளில் தக்காளி சாகுபடிக்கு தேவையான அளவு மழை பெய்து உள்ளதால் அவற்றின் சாகுபடி பரப்பு கோயம்புத்தூர், கிணத்துக்கடவு, தொண்டாமுத்தூர், நாச்சிபாளையம் மற்றும் ஆலாந்துறை பகுதிகளில் அதிகரித்து உள்ளது. மேற்கண்ட பகுதிகளிலிருந்து வரும் தொடர் வரத்து காரணமாக மொத்த சந்தையில் விலை சரிந்து கிலோவிற்கு ரூபாய் **3** முதல் **8** வரை விற்பனை ஆகிறது.

ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் உள்ளூர் மற்றும் உடுமலைப்பேட்டை பகுதிகளின் சிறந்த பயிர் உற்பத்தி காரணமாக அதிக வரத்து காணப்படுகிறது. கேரளா வியாபாரிகள் அருகில் உள்ள நாச்சிபாளையம் மற்றும் கிணத்துகடவு சந்தைகளில் தங்கள் கொள்முதலை மேற்கொள்வதால் 15 கிலோ பெட்டி விலை ரூபாய் 40 ஆக குறைந்து காணப்படுகிறது. தற்போது மொத்த சந்தை விலையாக தக்காளி கிலோவிற்கு ரூபாய் 4 முதல் 7 வரை விற்பனை செய்யப்படுகின்றது.

தலைவாசல் மொத்த சந்தையில் கருமாந்துறை பகுதிகளிலிருந்து அதிக வரத்து காணப்படுகின்றது. பொதுவாக ஆடி (ஜூலை – ஆகஸ்ட்) முதல் தை (ஜனவரி – பிப்ரவரி) வரை அனைத்து காய்கறிகளும் தேவைக்கு ஏற்ப சாகுபடி செய்யப்பட்டு இங்கு சந்தை படுத்தப்படுகிறது. ஆடிப்பட்ட நடவின் அதிக உற்பத்தியில் காரணமாக தற்போது விலை குறைந்து உள்ளது. தற்போது விலை சரிந்து கிலோவிற்கு ரூபாய் 4 முதல் 8 வரை விற்பனை ஆகிறது.

எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம், ஓசூர் மற்றும் தலைவாசல் உழவர் சந்தைகளில் நிலவிய தக்காளி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின் முடிவில், தக்காளி விலை அடுத்துவரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை குறைய வாய்ப்பு உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மேலும், தக்காளியின் சராசரி பண்ணை விலை ஜனவரி – பிப்ரவரி, 2015ல் கோயம்புத்தூர், ஒசூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 2 - 5 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இப்பண்ணை விலை அடுத்துவரும் மூன்று மாத பருவமழைக்கேற்ப மாறுவதற்கு வாய்ப்புள்ளது. இத்தகவலின் அடிப்படையில் விவசாயிகள் தங்களது கார்த்திகைப்பட்ட தக்காளி விதைப்பு பரப்பை குறைத்து கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், இதற்கு பதிலாக ஜனவரி – பிப்ரவரி, 2015ல் அதிக விலைக்கு விற்கும் வெண்டையை சாகுபடி செய்ய அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கத்திரி**

வர்த்தக ஆய்வுகளின் அடிப்படையில் தற்போது கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் தலைவாசல் சந்தைகளில் வழக்கமான வரத்து காணப்படுகின்றது. கோயம்புத்தூர் மொத்த சந்தைக்கு காரமடை, அன்னூர் மற்றும் தொண்டாமுத்தூர் பகுதி விவசாயிகளிடமிருந்து வரத்து கொண்டு வரப்படுகிறது. கடந்த கால விலை நிலவரத்தின்படி கத்திரி நவம்பர் - டிசம்பர் மாதங்களில் அதிக விலைக்கு விற்பனை ஆகின்றது. ஆடிப்பட்ட சாகுபடியின் அறுவடை முடிவடைவது விலை உயர்வுக்கு காரணமாக உள்ளது.

தற்போது கத்திரி விலை மேற்கண்ட மொத்த சந்தைகளில் கிலோவிற்கு ரூபாய் 16 முதல் 24 வரை உள்ளது. எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில் கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் ஆத்தூர் உழவர் சந்தைகளில் நிலவிய கத்திரி விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

விலை விவர மற்றும் வர்த்தக ஆய்வுகளின்படி, கத்திரி விலை நவம்பர் - டிசம்பர் மாதங்களில் உச்சத்தில் இருக்கும். தொடர்ந்து ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை குறைந்து காணப்படும். சராசரி பண்ணை விலை மேற்கூறிய மாதங்களில் கார்த்திகைப்பட்ட அறுவடை காலத்தில் கிலோவிற்கு ரூபாய் 8 முதல் 10 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் நடவு பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**வெண்டை**

வர்த்தக மூலங்களின்படி கோயம்புத்தூர் மற்றும் தலைவாசல் மொத்த சந்தைகளில் நவம்பர் மாத இறுதி வரை வெண்டை வரத்து தேவைக்கு ஏற்ப இருக்கும். பொதுவாக குளிர் காலங்களில் வெண்டை பயிர் நுண்துகள் பூஞ்சை காளான் தாக்குதலுக்கு எளிதில் ஆளாவதால் சாகுபடி குறைந்து காணப்படும். அதனால் தமிழ்நாட்டில் பெரும்பாலான விவசாயிகள் குளிர் காலத்திற்கு முன்பே தங்களது அறுவடையை முடித்துக் கொள்வதால் மொத்த சந்தைகளுக்கு வரத்து அதிகரித்துக் காணப்படுகிறது. தற்போது தலைவாசல் மற்றும் கோயம்புத்தூர் மொத்த சந்தைகளில் வெண்டை கிலோவிற்கு முறையே ரூபாய் 4 முதல் 6 மற்றும் ரூபாய் 10 முதல் 15 வரை உள்ளது.

ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் தற்போதைய அக்டோபர் மாத பலத்த மழையின் காரணமாக திண்டுக்கல் மாவட்ட வெண்டை சாகுபடி பாதிக்கப்பட்டு தரமான வெண்டை வரத்து குறைந்துள்ளது. அதனால் அக்டோபர் மாதத்தில் இவற்றின் விலை அதிகரித்துக் காணப்படுகிறது. தற்சமயம் வெண்டை ஒட்டன்சத்திரம் மொத்த சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 20 முதல் 25 வரை விற்பனை செய்யப்படுகிறது. கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தைகளின் வியாபாரிகள் தங்கள் தேவையை முக்கிய சாகுபடி பகுதிகளான தலைவாசல் மற்றும் சேலம் - வைகுந்தம் பகுதிகளிலிருந்து மேற்கொள்கின்றனர். பொதுவாக நவம்பர் முதல் ஜனவரி வரையான காலகட்டங்களில் கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தைகளில் விலை ஏறுமுகத்தில் இருக்கும்.

மேற்கண்ட மொத்த சந்தைகளில் எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் விலை நிலவரம் பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 11 வருடங்களில்

கோயம்புத்தூர், ஒட்டன்சத்திரம் மற்றும் ஆத்தூர் உழவர் சந்தைகளில் நிலவிய வெண்டை விலை விவரங்கள் ஆய்வு மற்றும் வர்த்தக ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

வர்த்தக மூலங்கள் மற்றும் விலை ஆய்வுகளின் மூலம் எதிர்வரும் ஜனவரி – பிப்ரவரி, 2015 மாதங்களில் சராசரி பண்ணை விலையானது கார்த்திகைப்பட்ட நடவு பயிர்களின் அறுவடை சமயத்தில் கிலோவிற்கு ரூபாய் 12 முதல் 15 வரை கோயம்புத்தூர் மற்றும் ஒட்டன்சத்திரம் மொத்த சந்தைகளில் இருக்கும் எனவும் தலைவாசல் மொத்த சந்தையில் கிலோவிற்கு ரூபாய் 10 முதல் 12 வரை இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகள் வெண்டை சாகுபடியை மேற்கொண்டு பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


<u>மேலும் விவரங்களுக்குதொடர்பு கொள்ள</u>

உள்நாட்டுமற்றும் ஏற்றுமதிசந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-6611374/ 0422-6611283

மக்கள தொடர்பு அலுவலர்